# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

## பிரிவு 10 ( 2009 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 15)

### விவிலிய வினாவிடைப் போட்டி

1. கடவுள் பேசிய முதல் வார்த்தை (சொல்) எது? **ஒளி தோன்றுக**
2. ஏதேன் தோட்டத்தில் பாய்ந்த ஆறுகள் யாவை? **பிசோன், கீசோன், திக்ரீசு, யூப்பிரத்தீசு**
3. கடவுள் படைத்தவற்றுள் சூழ்ச்சிமிக்கதாக இருந்தது எது? **பாம்பு**
4. பெண்ணுக்கு ஏவாள் என்று பெயரிட்டவர் யார்? **ஆதாம்**
5. முதல் பெற்றோரின் பிள்ளைகள் யார்? **காயின் ஆபேல்**
6. காயின் என்ன வேலை செய்தான்? **தோட்ட வேலை**
7. நான் என் சகோதனுக்கு காவலாளியோ என்று காயின் யாரிடம் கேட்டான்? **கடவுளிடம்**
8. மண்ணுலகில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது நோவாவிற்கு வயது என்ன? **600**
9. வெள்ளப்பெருக்கின் முடிவில் பேழை எங்கே தங்கியது? **அரராத்து மலையில்**
10. வெள்ளம் வடிந்து விட்டதா என அறிய நோவா இரண்டாவதாக அனுப்பிய பறவை எது? **புறா**
11. ஆபிரகாமின் மனைவி பெயர் என்ன? **சாராய்**
12. நாகோரின் மனைவி பெயர் என்ன? **மில்கா**
13. ஆபிரகாம் பிறந்த ஊர் எது? **ஊர்**
14. ஆகாரின் புதல்வன் பெயர் என்ன? **இஸ்மயில்**
15. லோத்து எங்கே வாழ்ந்தார்? **சோதோம்**
16. சோதோம் நகர் அழிவை திரும்பிப் பார்த்ததால் உப்புத் தூணாக மாறியவர் யார்? **லோத்தின் மனைவி**
17. ஈசாக்கின் புதல்வர்கள் யார்? **ஏசா, யாக்கோபு**
18. யாக்கோபிற்கு பிறந்த ஒரேயொரு மகள் பெயர் என்ன? **தீனா**
19. தீனாவின் தாயார் பெயர் என்ன? **லேயா**
20. ராகேலின் புதல்வர்கள் யாவர்? **யோசேப்பு, பென்யமின்**
21. தானியம் வாங்க தன் பிள்ளைகளை யாக்கோபு எந்த நாட்டிற்கு அனுப்பினார்? **எகிப்து**
22. மோசே எந்த குலத்தைச் சேர்ந்தவர்? **லேவி**
23. மோசேயின் மனைவியின் பெயர் என்ன? **சிப்போரா**
24. ஆண்டவரின் தூதர் மோசேக்கு எந்த மலையில் தோன்றினார்? **ஒரேபு**
25. ஆண்டவர் மோசேக்கு 10 கட்டளைகளை எந்த மலையில் கொடுத்தார்? **சீனாய்**
26. யோசுவாவின் தந்தை யார்? **நூன்**
27. இஸ்ராயேல் மக்களை கானான் நாட்டிற்குள் அழைத்துச் சென்றவர் யார்? **யோசுவா**
28. முதன் முதலில் நற்செய்தியை எழுதியவர் யார்? **மாற்கு**
29. பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகின்றது என்று கூறியவர் யார்? **திருமுழுக்கு யோவான்**
30. திருமுழுக்கு யோவானின் ஆடைகள் யாது? **ஒட்டகமுடி ஆடை, தோல் கச்சை**
31. திருமுழுக்கு யோவானின் உணவு யாது? **வெட்டுக்கிளி, காட்டுத்தேன்**
32. இயேசு எந்த ஆற்றில் திருமுழுக்கு பெற்றார்? **யோர்தான்**
33. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? **திருமுழுக்கு யோவானிடம்**
34. திருஅவையின் உறுப்பினராக எம்மை மாற்றும் அருளடையாளம் எது? **திருமுழுக்கு**
35. திருமுழுக்கு அருளடையாளத்தின் போது பயன்படுத்தப்படும் தைலத்தின் பெயர் என்ன? **கிறிஸ்மா**
36. திருப்பலியின் நான்கு பகுதிகள் யாவை? **தொடக்கச் சடங்கு, இறைவாக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு, முடிவுச் சடங்கு**
37. இயேசு யார் யார் வீட்டில் விருந்துண்டார்? **கானாவில் நடைபெற்ற திருமண வீட்டில்சக்கேயு வீட்டில், சீமோன் என்னும் பரிசேயர் வீட்டில், பெத்தானியாவில் மார்த்தா, மரியா வீட்டில், எம்மாவுக்குச் சென்ற இரு சீடர்களோடு, உயிர்த்த பின் திருத்தூதர்களோடு**
38. இயேசு நமக்கு அளிக்கும் உணவு யாது? **நற்கருணை**
39. நற்கருணையில் இருப்பவர் யார்? **இயேசு**
40. இஸ்ராயேலரை வழிநடத்திய பெண் நீதித்தலைவர் யார்? **தெபோரா**
41. உறுதிப்பூசுதல் அருளடையாளத்தின் வழியாக யாரைப் பெற்றுக்கொள்கின்றீர்? **தூய ஆவியை**
42. தூய ஆவியின் கொடைகள் எவை? **ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தெய்வ பயம்**
43. தூ ஆவியின் கனிகள் எவை? **அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்**
44. எந்நேரமும் நாம் விழிப்பாயிருக்க வேண்டும் என்பதை விளக்கும் உவமை எது? **10 தோழியர் உவமை**

45. மலைப்பொழிவில் எத்தனை பேறுகள் உள்ளன? **எட்டு**
46. அபியா வகுப்பைச் சேர்ந்த செக்கரியா எனும் பெயர் கொண்ட குருவின் மனைவி பெயர் என்ன? **எலிசபேத்**
47. திருமுழுக்கு யோவானின் தாய் தந்தை பெயர் என்ன? **செக்கரியா, எலிசபேத்**
48. செக்கரியாவிடம் பேசிய வானதூதரின் பெயர் என்ன? **கபிரியேல்**
49. மரியாவுடன் பேசிய வானதூதரின் பெயர் என்ன? **கபிரியேல்**
50. மரியா எலிசபேத்தோடு எத்தனை மாதங்கள் தங்கியிருந்தார்? **3**
51. யோசேப்பும், மரியாவும் வாழ்ந்து வந்த ஊரின் பெயர் என்ன? **நாசரேத்**
52. ஆசேர் குலத்தைச் சேர்ன் பானுவேலின் மகள் பெயர் என்ன? **அன்னா**
53. ஏரோதின் சகோதரர் பெயர் என்ன? **பிலிப்பு**
54. இயேசுவின் இறுதி வார்த்தை என்ன? **தந்தையே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்**
55. திருஅவையில் எத்தன்ன அருளடையாளங்கள் உள்ளன? **7**
56. இயேசு பெரிய வியாழன் அன்று நிறுவிய அருட்சாதனங்கள் யாவை? **நற்கருணை, குருத்துவம்**
57. திருத்தூதர்களின் படிப்பினைகள் அடங்கிய சிறிய நூல் எது? **திருத்தூதர் பணி**
58. இயேசு உயிர்த்தபின் சிடர்களுக்கு கற்பித்தது யாது? **இறையாட்சிபற்றி கற்பித்தார்**
59. யூதாசுக்கு பதிலாக தெரிவுசெய்யப்பட்ட திருத்தூதர் யார்? **மத்தியா**
60. பெந்தக்கோஸ்தே நாளன்று தூய ஆவியைப்பெற்ற சீடர்கள் என்ன செய்தனர்? **பல மொழிகளில் பேசத்தொடங்கினர்**
61. ஸ்தேவான் எவ்வாறு இறந்தார்? **கல்லால் எறியப்பட்டு**
62. தூய ஆவிபற்றி முன்னறிவித்த இறைவாக்கினர் யார்? **யோவேல்**
63. இயேசு திருமுழுக்கு பெற்ற போது தூய ஆவியார் எவ்வடிவில் தோன்றினார்? **புறா வடிவில்**
64. பெந்தக்கோஸ்தே தினத்தன்று திருத்தூதர்கள் மேல் தூய ஆவியார் எவ்வடிவில் இறங்கினார்? **நெருப்பு போன்ற பிளவுபட்ட நா வடிவில்**
65. மரியாவின் வாழ்த்தைக்கேட்டதும் எலிசபேத்தின் வயிற்றிலிருந்த குழந்தை என்ன செய்தது? **மகிழ்ச்சியால் துள்ளிற்று**
66. தூய ஆவியின் வருகை எப்போது நிகழ்ந்தது? **பெந்தகொஸ்தே தினத்தன்று**
67. இறுதி இராவுணவின் போது இயேசு தம் சீடர்களுக்கு கற்பித்த புதிய கட்டளை யாது? **அன்புக்கட்டளை**
68. இறுதி இராவுணவின் போது இயேசுவின் தோளில் சாய்திருந்த அவரது அன்புச் சீடர் யார்? **யோவான்**
69. இயேசுவின் காலப்பகுதியில் தலைமைக்குருக்களாக இருந்தவர்கள் யார்? **அன்னா, கயபா**
70. இயேசுவுக்கு மரணத் தீர்ப்பு வழங்கியவர் யார்? **பிலாத்து**
71. கத்தோலிக்க திருஅவையின் பண்புகள் யாவை? **ஒருமை, தூய்மை, கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்**
72. திருஅவையை இன்றும் வழி நடத்தி வருபவர் யார்? **தூய ஆவியார்**
73. இயேசு திருஅவையை ஏற்படுத்தி அதன் தலைவராக யாரை நியமித்தார்? **திருத்தூதரான பேதுருவை**
74. திருஅவையை ஏற்படுத்தியது யார்? **இயேசுக்கிறிஸ்து**
75. குருத்துவம் எவ்வகைப்படும்? **பணிக்குருத்துவம், பொதுக்குருத்துவம்**
76. திருமுழுக்கின் மூலம் நாம் எல்லோரும் அடையும் குருத்துவம் எது? **பொதுக்குருத்துவம்**
77. சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தால் அனைத்து பணியக இறைமக்களும் இணைந்து கொண்டாடும் இரண்டு திருவிழாக்கள் எவை? **அயன்சீடல்ன் கறுப்புமாதா திருவிழா, மரியாஸ்ரைனில் மடுமாதா திருவிழா**
78. சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் அதிகாரபூர்வமாக தோற்றம் பெற்ற காலம் எது? **1996ஆம் ஆண்டு ஜனவரி 01**
79. சுவிஸ்சலாந்தில் எத்தனை மறைமாவட்டங்கள் உள்ளன? **6மறைமாவட்டங்கள்.**
80. திருச்சபையின் முதலாவது திருத்தந்தை யார்? **திருத்தூதர் பேதுரு**
81. எமது திருத்தந்தையின் பெயர் என்ன? **திருத்தந்தை பிரான்சிஸ்**
82. இயேசு உயிர்த்து எத்தனையாம் நாள் விண்ணேற்றம் அடைந்தார்? **40ம் நாள்**
83. விலிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? **73**
84. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? **46**
85. புதிய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? **27**
86. திரு விவிலியத்தில் மிகப் பெரிய அதிகாரம் எது? **திருப்பாடல் 119**
87. திரு விவிலியத்தில் மிகச் சிறிய அதிகாரம் எது? **திருப்பாடல் 117**
88. திரு விவிலியத்தில் நீண்ட வசனம் ? **எஸ்தர் 8:9**
89. புதிய உடன்படிக்கையில் பாஸ்கா செம்மறி யார்? **இயேசு கிறிஸ்து.**
90. மடு அன்னை முடி சூட்டப்பட்ட 100 ஆண்டு விழா எப்போது கொண்டாடப்பட்டது? **02-07-2024**

**பேச்சுப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)**

## பிரிவு 10

### மங்கள வார்த்தை செபம்

மங்கள வார்த்தை செபம் ஒரு எளிய கருத்தாழமிக்க செபமாகும். இச்செபத்தில் இரு பகுதிகள் உள்ளன. முதற் பகுதி விவிலியத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகவும், இரண்டாம் பகுதி திரு அவை கற்பித்தவையாகவும் காணப்படுகின்றன. இறைவனிடமிருந்து செய்திகளைப் பெற்று மனிதருக்கு **அறிவிக்கும்** பணியை செய்த கபிரியேல் அதிதூதர் அன்னை மரியாவுக்கு கூறிய வார்த்தைகளோடு இச்செபம் ஆரம்பமாகி, அன்னை மரியா எலிசபெத்தை சந்தித்த போது அவர் மகிழ்ச்சி மிகுதியில் உதிர்த்த வார்த்தைகளை உள்ளடக்கி இச்செபம் தொடர்கிறது.

திரு அவை அன்னை மரியாவை "பரிந்துரையின் அன்னை" என்று அழைக்கிறது. பாவம் எதுவுமின்றி எப்பொழுதும் கன்னியாய் இருப்பவர் அன்னை மரியா. அன்னையின்றி வெற்றியில்லை, அன்னையிருக்க தோல்வியில்லை, இதனை உணர்ந்து பாவிகளாகிய நமக்காக தம் திருமகனிடம் பரிந்து பேசி நம் தேவைகளை நிறைவேற்ற அன்னை வழியாக செபிக்க திரு அவை அழைக்கிறது.

அருள் நிறைந்த மரியே வாழ்க
ஆண்டவர் உம்முடனே
பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய
இயேசுவும் ஆசி பெற்றவரே

புனித மரியே இறைவனின் தாயே
பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக
இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும்
வேண்டிக் கொள்ளும். ஆமென்

**பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)**

எனில் வாரும் என் இயேசுவே
என்றும் என்னோடு உறவாடவே
நீரின்றி ஒன்றில்லையே - இங்கு
நீர்தானே என் எல்லையே

என் நெஞ்ச வீட்டினில் என் இன்பப் பாட்டினிலே
உன் நாமம் நான் பாட என் உள்ளம் நீ வாழவே
என் அன்புத் தாயாக எந்நாளும் எனைக் காக்கவே
என் சொந்தம் நீயாக என் வாழ்வும் நீயாகவே
தேவா எழுந்து வா தேடும் அமைதி தா - 2
உனை அழைத்தேன் உயிர் கொடுத்தேன் உறவைத் தேடியே

பயணம்தான் நான் செல்ல பாதையும் நீயாகவே
வழியெல்லாம் துணையாக வாழ்வெல்லாம் இனிதாகவே
சுமையெல்லாம் சுகமாக பகையெல்லாம் பரிவாகவே
நினைவெல்லாம் நிறைவாக நெஞ்சோடு நீ வாழவே
தேவா எழுந்து வா ...